[1979 ஏப்ரல் 16]

Girl child labour in match factories in Sivakasi area.

* Q No.710 Thiru SALEM M. ARUMUGAM : Will the Hon. the Minister fo Labour be pleased to state—

(a) Whether the Government are aware of employment of girl child labour by the match factories in Sivakasi area; and

(b) the steps taken to eradicate this system?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) தொழிற்சாலைகள், காலமுறையில் தொழிற்சாலை ஆய்வகத்தால் பார்வையிடப்பட்டு, 1948 ஆம் வருடத்திய தொழிற்சாலை சட்டத்தின் வரையறைகளை மீறும் நிறுவனங்களுக்கு எதிராக தண்டனை நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : இந்த ஆண்டு சர்வதேச குழந்தைகள் ஆண்டு அனுஷ்டிக்கப்படுவதால் 12 வயதுக்குக் கீழே உள்ள இளம் சிறார்கள் தனியாருடைய ஆலைகளிலும், நிறுவனங்களிலும் அவர்களுடைய வறுமையின் காரணமாக வேலைக்கு அமர்த்தப்படுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும். அவ்வாறு அவர்கள் வேலைக்கு அனுப்பப்படுவதன் காரணமாக சிவகாசியில் சமீபத்தில் விபத்து ஏற்பட்டு 42-க்கு மேற்பட்ட இளம் சிறார்கள் துடிக்கத் துடிக்க இறந்ததை அரசு அறியும். எதிர் காலத்திலாவது இப்படி இளம் சிறார்களைத் தனியார் நிறுவனங்களில் வேலைக்கு அமர்த்தப்படுவதைக் கண்டிக்கும் வகையில் அதைத் தடுக்க கடுமையான நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

[முற்பகல் 9-40]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணன் அவர்கள் கேள்வி கேட்க இருக்கிறார்கள். எல்லாவற்றுக்கும் அரசவையின் முடிவை இங்கே படித்து விடுகிறேன். அது எல்லோருக்கும் திருப்தி அளிக்கும் என்று கருதுகிறேன்.

மேற்குறித்த பொருள் பற்றி அரசு ஆய்ந்தபின் கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன :—

(1) சிறார்களை வேலைக்கு அமர்த்துதல் தொடர்பான சட்டங்களின் விதிமுறைகள் தீவிரமாகச் செயல்படுத்தப்பட வேண்டும்.

(2) வேலையில் அமர்த்துவோர் அல்லது கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் பணிக்கொட்டகைகள் அமைத்து தொழிற்சாலைகளில் நடக்கும் பணிகளைச் சிறார்கள் வசிக்கும் கிராமங்களிலேயே நடத்த உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(3) அப்பகுதியில் உள்ள சிறார்கள் பள்ளிக்குச் செல்லும் வகையில் அவர்களுக்கு ஊக்குவிப்பும் கூடிய வரையில் அவர்கள் வேலை செய்து கொண்டே கல்வி கற்கவும் ஏற்ற வகையில் ஒரு விரிவான திட்டம் தீட்டப்பட வேண்டும்.

(4) தொழிலாளர்களின் ஈட்டும் திறனை அதிகரிக்க, குறைந்த அளவு ஊதிய விகிதங்கள் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

(5) தொழிற்சாலைகளில் வேலை செய்யும் சிறார்களின் நலனைப் பாதுகாக்கவும், சிறார்களை வேலைக்கு அமர்த்துவதால் ஏற்படும் பிரச்சினைகளைக் குறைப்பதில் ஈடுபட்டுள்ள பல்வேறு நிறுவனங்களின் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்கும், இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில் தொழிலதிபர்கள், தொழிலாளர் யூனியன்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளை உறுப்பினர்களாகக் கொண்ட ஓர் ஆயம் அமைக்கப்பட வேண்டும்.

மேற்குறித்த முடிவுகளைச் செயல்படுத்த தனியே நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

<u>திரு. கு. ரமணி</u> : மிகவும் வேதனைமிக்க நிகழ்ச்சி— சிவகாசியில் தீப்பெட்டித் தொழிற்சாலைக்கு வேலைக்குச் செல்ல விடியற் காலை 4 மணிக்கே வேலைக்கு அனுப்பி விபத்து ஏற்பட்டு அதனால் ஏற்பட்ட பரிதாபகரமான சாவை அத்தனை பேரும் அறிவோம். குழந்தைகளை வேலைக்கு எடுத்துக் கொள்வதைத் தடை செய்யும் சட்டம் இருக்கிறது. அதைக் கறாராக அமல்படுத்துவோம் என்று அமைச்சர் அவர்கள் எப்படிச் சொல்லுகிறார்? எப்படி கறாராக அமல்படுத்தப் போகிறார்? அதற்கு என்ன விசேஷமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன? குழந்தைகள் வேலை செய்யக்கூடிய தொழிற்சாலைகளிலே சர்ப்ரைஸ் விசிட் செய்து— எதிர்பாராத முறையில் சென்று பார்த்து அதைக் கண்டுபிடிக்கும் முறை இருக்கிறதா? அந்த மாதிரி நடவடிக்கை எடுக்க பிரத்தியேகமான அதிகாரிகள் இருக்கிறார்களா? கிராமங்களில் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பி கல்வியும் கற்றுக் கொடுத்து அங்கேயே அந்தக் குழந்தைகள் தீப்பெட்டி செய்யும் தொழிலையும் செய்யும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்படுமா? தொழிற்சாலைச் சட்டம் அமலாக்கப்பட வேண்டும். அதைச் செய்வார்களா?

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்</u> : இந்தப் பிரச்சினையின் முக்கியத்துவத்தை அறிந்த காரணத்தால்தான் இது அமைச்சரவையிலேயே பேசப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்லுகிறேன். அமைச்சரவையிலே இந்தப் பிரச்சினையை எடுத்துக் கொண்டு பேசுவது என்றால் எந்த அளவுக்கு இது முக்கியமான

1979 ஏப்ரல் 16]

பிரச்சினை என்று அரசு கருதுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் பாராட்டுவார்கள் என்று கருதுகிறேன். அதை யொட்டி எடுக்கப்பட்ட ஐந்து முடிவுகளை 'எக்ஸாஸ்டிவ் ரிப்ளையில்' ஏற்கனவே கொடுத்து விட்டேன். எந்த உறுப் பினரைக் கேட்டாலும் இந்த ஐந்து முடிவுகள் அவர்களுக்கு திருப்தியளிக்கக்கூடிய வகையில், பதில் இருக்கும் என்ற நம்பிக் கையில் சொல்லியிருக்கிறேன். துணைத் தலைவர் அவர்கள் அனுமதி கொடுத்தால் மீண்டும் அந்த ஐந்து முடிவுகளைப் படிக்கத் தயாராக இருக்கிறேன்.

திரு கு. ரமணி : குழந்தைகளுக்குக் கிராமத்திலே படிப்பும் கற்றுக் கொடுத்து வேலையும் செய்கிற மாதிரி ஏற்பாடு உண்டா என்பதற்கு பதில் இல்லை. பள்ளிக்கூடத்திலேயே தீப்பெட்டி செய்கிற தொழில் நடக்க தொழிற்சாலையை அங்கே வைத்து அதிலும் குழந்தைகளை ஈடுபடச் செய்வார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : அப்பகுதியிலுள்ள சிறார்கள் பள்ளிகளுக்குச் செல்லும் வகையில், அவர்களை ஊக்குவிக்கக்கூடிய வகையில், அவர்கள் வேலை செய்து கொண்டே கல்வி கற்கும் வகையில் ஏற்ற வகையில் விரிவான திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. I mean extensive or exhaustive programme comprehensive என்பது சரியான வார்த்தையாக இருக்கிறது.

இன்னொன்றும் சொல்லுகிறேன். இங்கே நாம் இப்படிப் பேசுகிறோம். அப்படி தொழில் செய்யக்கூடிய பிள்ளைகளின் தந்தையரைக் கேட்டால் எப்படியோ பிள்ளைகள் ஒரு நாளைக்கு எட்டணா, பத்தணா சம்பாதித்துக் கொண்டு வருகிறார்கள், அதிலே மண்ணைப் போடாதீர்கள் என்று சொல்லுகிறார்கள். இவற்றையெல்லாம் மனதில் வைத்துத்தான் குழந்தைகள் படிக்கவும் வேலை செய்யவும் ஆபத்து இல்லாமல் இருக்கவும் எந்தெந்த மாட்ச் பாக்டரிகளைத் தொழிற்சாலைச் சட்டத்திற்குள் கொண்டு வரமுடியும் என்று பரிசீலனை செய்து அவை கொண்டு வரப்படும். இவற்றையெல்லாம் பரிசீலித்துத்தான் ஐந்து வகை யான முடிவுகளை எடுத்திருக்கிறோம். காலம் செல்லச் செல்ல அனுபவம் மிக்க உறுப்பினர்கள் தங்கள் மேலான யோசனைகளைச் சொல்வார்களானால் இந்த அரசு அதையும் தீவிரமாகப் பரிசீலனை செய்யும்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தத் தொழிற்சாலைகளில் உள்ள முதலாளிகள் குழந்தைகளை அனுப்ப வேண்டும் என்று கேட்பதில்லை. ஆனால்

அங்கே உள்ள ஏழை எளிய மக்கள் அந்தக் குழந்தைகளை அனுப்புகிறார்கள். பெண் குழந்தைகளாக இருந்தால் அவர்கள் சம்பாதித்துக் கல்யாணம் முடித்துக் கொள்கிறார்கள். அந்தக் குழந்தைகள் போக விரும்பாவிட்டால் அந்தக் குடும்பங்களைக் காப்பாற்றுவதற்கு வேறு தொழில் ஏற்படுத்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே இதைப்பற்றிச் சொன்னேன்—தொழிலாளர்களுடைய குழந்தைகள் வேலைக்குப் போகாமல் இருக்க வேண்டும் என்று சொன்னால் அவர்களுடைய பெற்றோர்களுடைய ஈட்டுத் தொகையை சம்பாதிக்கும் திறனை அதிகமாக்க வேண்டும். அதை இந்த அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. அந்த குறைந்த வருவாயை மாற்றுகிறோம் என்று சொன்னால் அவர்களுடைய வருவாயை உயர்த்துவது என்றுதான் பொருள். இது ஒரு முக்கியமான பிரச்னை. அதில் ஒரு ஸ்டெப் எடுத்திருக்கிறோம். போகப் போக நீங்களும் ஸ்டெப் எடுத்து வந்தால், அதிலே உள்ள குறைகளை எடுத்துச் சொன்னால் அவைகளை முறைப்படி களைய இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் உள்ள குழந்தைகளைப் பற்றி அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். அந்தக் குழந்தைகளுடைய பெற்றோர்களின் வருவாயை அதிகப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படுவதாகச் சொன்னார்கள். அப்படி இந்த நாடு செய்ய முடியாது. ஒரு சோஷலிஸ நாட்டில் அப்படி கொடுக்க முடியாது. அந்தச் சின்ன குழந்தைகள் வேலைக்குச் சென்றால் ரூ. 1, ரூ. 2 வருமானம் கிடைக்கும். அத்தனை பேருக்கும் வேலை கொடுக்க முடியாது. இருந்தாலும் இப்போது வேலைக்குப் போகிற குழந்தைகள் பற்றி சரியாக ஒரு ரிஜெஸ்டர் வைக்க ஏற்பாடு செய்யவேண்டும். அப்படி வைத்துக்கொண்டால் இப்படி தீ விபத்து அல்லது வேறு ஏதாவது கஷ்டம் வந்தால், அவர்களுக்கு நிவாரணம் கிடைப்பதற்கு வசதியாக இருக்கும், சமீபத்தில் சிவகாசியில் விபத்து ஏற்பட்ட போது, ஒரு குடும்பத்தில் மூன்று பேர்கள் இறந்துவிட்டால் ஒருவருக்கு மட்டும் நிவாரணம் கொடுக்கப்பட்டது. ஆனால் முதல் அமைச்சர் அவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 5,000 கொடுப்பதாகச் சொன்னார்கள். அந்தத் தொழிற்சாலை முதலாளிகள் அந்தத் தொகையைக் கொடுத்துவிட்டார்கள். அரசு அந்தப் பணத்தைக் கொடுக்கவில்லை. அந்தப் பாக்கிகள் எல்லாம் கொடுப்பதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

1979 ஏப்ரல் 16]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சில புள்ளிவிவரங்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதால் நான் அவைகளைத் தருகிறேன். 1948-ம் ஆண்டு தொழிற்சாலை சட்டத்தில் 67-வது பிரிவில் இந்தக் குழந்தைகள் வேலைக்கு வைப்பது தடுக்கப்பட்டிருக்கிறது. 1535 தொழிற்சாலைகளில் 235 தான் அந்தத் தொழிற்சாலை சட்டத்திற்குக் கீழ் வருகிறது. அதிலே வேலை செய்யக்கூடிய சிறார்கள் 668 பேர்கள். அதைக் குறைத்து, 'Earn while you learn' என்ற வகையில் ஒரு பெரிய திட்டத்தைப் போட்டிருக்கிறோம். அடுத்து இழப்பீட்டைப் பற்றிச் சொன்னார்கள். அதுபற்றி தனிக் கேள்வி போட்டால் விவரமாகப் பதில் தருகிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்த சைல்டு லேபர் பற்றி ஒரு கமிட்டி போடப்பட்டு, அதனுடைய ரிப்போர்ட் அரசாங்கத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டு அது ஒரு ஊறுகாய் பானையில் போடப்பட்டிருக்கிறது என்று பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. ஆக, அந்த ரிப்போர்ட்டை இந்த அவையில் வைக்கப்படுமா? இப்போது அந்தக் குழந்தைகள் சம்பாதிக்க வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிற காரணத்தால்—நான் மேற்கு வங்க அமைச்சர் அவர்களிடத்தில் பேசுகிறபோது தாழ்த்தப்பட்டச் சமுதாயத்தைச் சேர்ந்த குழந்தைகள் பள்ளிக்குச் சென்றால் அந்தக் குடும்பத்திற்கு ரூ. 22 கொடுப்பதாகச் சொன்னார்கள். அப்படிப்பட்ட ஒரு ஏற்பாட்டை செய்வதற்கு இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-50)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அர்பான் சிங் தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை ஒன்று அரசுக்கு வந்திருக்கிறது. அந்த அறிக்கையை சட்டமன்றத்தில் வைக்க வேண்டும்? அதைப்பற்றி இங்கு சொல்லலாமா என்பதைப்பற்றி ஆராய்ந்து முடிவு எடுத்த பின்னால் இதைப்பற்றி சொல்ல முடியும். நானும் மேற்கு வங்காள தொழிலாளர் நல அமைச்சர் அவர்களோடு நிரம்ப பேசியிருக்கிறேன். நாங்கள் இரண்டு பேர் ஒன்றாக சேர்ந்திருந்து நேற்று கூட 'பிரேக் ஃபாஸ்ட்' சாப்பிட்டோம். நாங்கள் பேசிக் கொண்டிருந்தபோது ஒரு சாலஞ்ச் கூட எடுத்திருக்கிறோம். தொழிலாளர்களுக்கு அதிக நன்மைகளை செய்திருப்பது தமிழ்நாடா அல்லது மேற்கு வங்காளமா என்று.. We will take a challenge. I only throw the challenge. இப்படி இரண்டு பேரும் சாலஞ்ச்சாக சொல்லியிருக்கிறோம். தொழிலாளர்களுக்கு எந்த அரசு அதிகமாக நன்மைகளை செய்திருக்கிறோம் என்பதைப்பற்றி போட்டியிட்டிருக்கிறோம். தமிழகம் தான் இதில் நிச்சயமாக வெல்லும், புரட்சித் தலைவர் அவர்களின் ஆதரவின் காரணமாக.